
பலராமய்யாவின் சுற்றுலா





தொகுப்பாசிரியர்:

பட்டர்வொர்த். எஸ். எம். ஜைனுத்தீன் B.Sc.

வசந்தா பதிப்பகம்

பலராமய்யாவின்

சுற்றுலா

தொகுப்பாசிரியர் :

பட்டர்வொர்த் ஜைனுத்தீன், பி. எஸ்ஸி.,

வசந்தா பதிப்பகம்,

3, முத்துக்கிராமணி தெரு,

சேந்தோம் : : சென்னை—4.

முதற் பதிப்பு — 1969.

ஆசிரியரின் நூல்கள் :

இதயத் தாமரை (கவிதை)

இலட்சியக் கவிஞர் இக்பால்

மாமறை வந்த மாதம்.

விலை: ரூ.

அச்சகம்:

தி நியூ பிரஸ், ("நூருல் இஸ்லாம்"), சென்னை—1.



வள்ளுவமணி

வள்ளல் ரெஞ



ஹாபிஸ் (பாகவி)




தமிழவேள்
கோ. சாரங்கபாணி


★ ★



பேராசிரியர்
கா. அப்துல் கபூர். எம். ஏ.



கே. சண்முகம் பி. ஏ., பி. எல்.



குமார கோமேதகவேலு
ஐ. ஏ. எஸ்.




இரா. முத்துக்குமாரசுவாமி
எம். ஏ, பி. லிப்.

★ ★




இராதாகிருஷ்ணன்
[தமிழ் முரசு]

★



ஓவியர் எஸ். கே. ஹுசைன்



பட்டர்வொர்த்

ஜைனுத்தீன் B.Sc.

சிறப்புரை

குமார கோமேதக வேலு, ஐ. ஏ. எஸ்.
(தமிழ்நாடு அரசு எழுது பொருள், அச்சுத்துறை இயக்குநர்)

"நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பது வள்ளுவப் பெருந்தகையின் அருள் வாக்கு. நம் நாட்டிலே தொன்மையும், பழஞ்சிறப்பும் மிகுந்த மருத்துவ முறை சித்த மருத்துவ முறையாகும். நம்முடைய முன்னோர்களால் பந்நெடுங்காலமாகக் கையாளப்பட்டு, பரம்பரை பரம்பரையாக வந்துள்ளது சித்த மருத்துவம். ஐம்பூதக் கொள்கைக்கும், அறுசுவைக்கும், முக்குற்றத்திற்கும், ஏழு உடல் கட்டுகளுக்கும் உ.ள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு, மிகினும், குறையினும் நோய் வரும் என்றும் ஓர் அடிப்படையினுள் அமைந்து, உணவு உண்ணும் மனிதன் சரியான பக்குவத்துடனும், திறமான கைபாகத்துடனும் அறுசுவையுடனும் அமையக்கூடிய உணவினை அளவுடன் சாப்பிட்டால் சிறப்பான முறையில் நோயணுகா வகையில் வாழலாம் என்றும் முன்னோர்கள் கூறியுள்ளார். இதற்கு நாம் உண்ணும் உணவின் பல்வேறு தன்மைகளையும் செவ்வனே புரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வகையில் நாம் உண்ணும் உணவின் பல்வேறுபட்ட தன்மைகளை உணர்வதானது எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல நம் உடம்பை அழிக்கும் வகையில் தோன்றும் பல்

வேறு நோய்களின் தன்மைகளையும் சீராகப் புரிந்து கொண்டு, அவற்றுக்கான சிகிச்சை முறைகளை நன்கு புரிந்து கொள்வதும் நோயற்ற—மகிழ்ச்சி மல்கிய வாழ்க்கையினை வாழ்தலுக்கு இன்றியமையாதது.

இந்த அருமையான சித்த மருத்துவ முறையின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் செவ்வனே ஆராய்வதில், நேரத்தை யெல்லாம் செலவிட்டு, தாம் கண்டுணர்ந்தனவற்றை அனைவரும் புரிந்து கொண்டு கையாள்வதற்கு உகந்த வகையில் அதை எடுத்துக் கூறி வரும் மதிப்பிற்குரிய மாண்புமிகு பலராமய்யா B. A. B. L. (மாவட்ட நீதிபதி) அவர்களின் சேவை மிகவும் பயனுள்ளது என்பது மட்டுமல்ல, பாராட்டுதற்குரியதுமாகும். ‘யாம் கண்ட இன்பம் பெறுக இவ்வையகம்’ என்பதற்கிணங்க தம் சிந்தனைக் காட்டில் மலர்ந்த பயனுள்ள கருத்துக்களையும், சீரிய ஆராய்ச்சியின் விளைவாக முகிழ்த்த எண்ணங்களையும் இப்பெரியார் எழுதியுள்ள நூல்களைப் பயின்று பயன்துய்த்தவன் நான். அவருடைய சீரிய ஆராய்ச்சியின் நற்பலன்களை அனைவரும் உணர்ந்து பயனும், பலனும் கொள்ளவேண்டும் என விழைகின்றேன்.

வளர்க ஆசிரியரின் கருத்துக்கள் !

வாழ்க சித்த மருத்துவம்.

சென்னை—1.
30—7—69

அன்பன்

குமார கோமேதக வேலு

அணிந்துரை

ஹாபிஸ் ஏ. என். முஹம்மது யூசுப் [பாகவீ]

[ஆசிரியர், "நூருல் இஸ்லாம்"]

டாக்டர் பலராமய்யா பி. ஏ. பி. எல். சென்னையில் வாழ்பவர். இவர் அமைதியும், நற்குணமும் குடிகொண்டவர். சுய நல மின்றி பிறநலத்தையே நோக்கமாய்க் கொண்டவர். இவருடைய சந்திப்பை சமீபகாலத்திலே பெற்றேன். இவருடைய பரந்த நோக்கத்தையும், பாருலக மக்கள் மீது கொண்டுள்ள பரிவையும் பரிபூரணமாய் அறிந்தேன். இவர் பல அரசாங்க உயர் பதவிகளில் இருந்து வந்திருக்கிறார்; இன்னமும் இருக்கிறார். பொதுமக்களுக்கு தொண்டும் தூய்மையான உதவியும் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு இதயத்தில் குடி கொண்டிருக்கிற தென்பதையும் நான் கண்டேன். டாக்டர் பலராமய்யா, சித்த வைத்தியத்தின் மூலம் பல பேருபகாரங்களை மக்களுக்குச் செய்ய முடியும் என்று நினைக்கிறார். நினைப்பதுடன் நில்லாமல் தனது செயலாலும் செய்து காட்டுகிறார். உண்மையிலேயே டாக்டர் பலராமய்யா, சித்த வைத்தியத்தில் நிபுணர். இவருடைய ஆற்றலை விளக்க இவர் எழுதிவெளியிட்டிருக்கும் 'நீடுழி வாழவழி', 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து', 'சித்தர் மெய்ப்பொருள்', 'சித்தர் கைகண்ட மருந்து' முதலிய வைத்திய நூல்களே போதிய சான்றுகளாகும். இவ்வைத்திய நூல்களைப் படிப்பவர்களும் வைத்தியர்களாய்ச் சமையலாம் என்று துணிவுடன் கூறலாம். எனவே டாக்டர் பலராமய்யாவின் கூட்டுறவையும் நேரில் சந்திக்கும் பாக்கியத்தையும் பெற்றுக்கொள்ள முடியாத மக்கள் அவருடைய

அருமையான வைத்திய நூல்களைப்படித்து நல்ல பிர யோசனத்தைப்பெறலாம் என்று துணிந்துகூறுகிறேன். சுருங்கக் கூறின், டாக்டர் பலராமய்யாவைப் போன்ற பெருந்தகையாளர் அகிலத்தில் நீடித்து வாழ்வது மக்க ளுக்கான அல்லாஹ்வின் அருள் என்று முடிக்கலாம். இத் தகைய அருங்குணக்குன்றின் மலேசிய–சிங்கை சுற் றுலா அங்குள்ள மக்களுக்குப் பெரும் பயன் விளைத்திருக் கும் என்பதில் ஐயமில்லை. அண்மையில் நான் மலே சியா சிங்கை சென்றிருந்தபோது, டாக்டர் பலராமய் யாவைப் பலர் போற்றிப் புகழ்வதைக்கண்டு வியப்புற் றேன். அவரை நேரில் கண்ட பின்னர்தான் அப்புகழு ரையில் புதைந்துள்ள பொருளை உணர முடிந்தது. பலராமய்யாவின் சுற்றுலா பலருக்கும் பயன் தரவேண் டுமென்ற பரந்த நோக்கோடு இந்நூலை பதிப்பித்துள்ள வழக்கறிஞர் சண்முகம் பி. ஏ. பி. எல். அவர்களைப் பாராட்டுகிறேன் இவர் நீண்டகாலம் வாழ்ந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை—1, இங்ஙனம்,

28—7—1969 ஹாபிஸ் A. N. முஹம்மது யூசுப் [பாகவி]

பாராட்டுரை

பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ.

[Principal, Crescent Residential Institute, Madras-9]

**"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்ப துவுநன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று"**

உயர்திரு பலராமய்யா அவர்களை அண்மையிற் கண்டு அளவளாவும் வாய்ப்பேற்பட்டபோது, என் னெஞ்சத்தெழுந்த பைந்தமிழ் மூதாட்டியின் பாவடிகள் இவை. தொடர்ந்து அவர்களின் நூல்கள் சிலவற்றைப் படிக்கும் பேற்றினைப் பெற்றேன். சட்டத்தின் நுட் பங்களை ஆய்ந்து தீர்ப்பளிக்கும் நீதித்துறையில் பணி யாற்றும் உயர்திரு பலராமய்யா அவர்கள், மருத்துவத் துறையில் பெற்றுள்ள ஆழ்ந்த ஞானமும் பயிற்சியும் என்னை வியப்பிலாழ்த்தின. அவர்களின் தெளிந்த அறிவிற்கும் திறனிற்கும் எடுத்துக்காட்டாய் விளங்கு வன அவர்தம் நூல்களும், அவர்களைச் சூழ்ந்துள்ள அன்பர்களும் நண்பர்களுமெனக் குறிப்பிடலாம். பல ராமையயாக்களை நாடறியும். ஆனால், பலராமய்யா போன்றவர்களைக் காண்டல் அரிது.

தண்டமிழ் நாடு தலைகொண்டு போற்றிய சித்த மருத்துவத்துறை, பலராமய்யாபோன்றவர்களின் அரிய முயற்சியால் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது; மறக் கப்பட்டுவரும் தருக்களும் மூலிகைகளும் செடி கொடி களும் ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தஞ்சமளிக்கும்

சஞ்சீவிகளாகப் பயன்பட்டு வருகின்றன. பின்னவர்களால் புறக்கணிக்கப்பட்டுவரும் முன்னோர்களின் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் அறிவுக்கண் திறக்கும் கருவூலங்களாக மதிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பண்பார் பெருந்தகை பலராமய்யா அவர்களின் மலாயாச் சுற்றுப் பயணம் பற்றிய குறிப்புகள் நூல் வடிவில் வெளி வருவது மகிழ்ச்சிக்குரியது. ஏற்றமான பயணமொன்று எழிலும் பயனும் நிறையும் வண்ணம் மக்கள் நெஞ்சில் என்றும் பசுமையாக நிலைத்திருப்பதற்கு அன்புச் சோதரர் ஜனாப் பட்டர்வொர்த் ஜைனுத்தீன் அவர்கள் மேற்கொள்கின்ற முயற்சி புதுமையானது; பாராட்டுதற்குரியது. மலைநாடு செல்வோரை மலைக்க வைக்கும் அன்பும் ஆர்வமும் பூண்ட பண்பாளர் ஜைனுத்தீன் அவர்களின் பணி வாழ்க! தகுதிவாய்ந்த தமிழ் நூல்கள் பலவற்றைச் சீரிய முறையில் அச்சியற்றி வெளியிடும் பணியினை மேற்கொண்டுள்ள வசந்தா பதிப்பகத்தாரின் தொண்டு வளர்க!

—கா. அப்துல் கபூர்

மதிப்புரை

(தமிழ் முரசு தமிழகப் பிரதிநிதி திரு. கி. இராதாகிருஷ்ணன்)

சித்தவைத்திய மேதை மாண்புமிகு வி. பலராமய்யா அவர்களின் சித்த வைத்தியம் மானிட சமுதாயத்திற்கு கைகண்ட நிவாரணமாகும். அவர்களுடைய பக்குவ மான வைத்திய முறைகளுடன் அவர்கள் கூறும் அன்பான எளிய வழிவகைகள் சாலச் சிறந்த மருந்துகளாம்,

மாண்புமிகு பலராமய்யா அவர்கள் அன்மையில் மலேசியா—சிங்கப்பூர் சென்று அங்கு வதியும் மக்களுக்கு சித்த வைத்திய முறைகளைச் சிறப்பாக எடுத்து விளக்கி திரும்பியுள்ளார். எனவே அவர்களுடைய சேவை தமிழகத்திற்கு மட்டுமன்றி கடல் கடந்தும் எட்டியுள்ளது அரிய வாய்ப்பாகும்.

அவர்களுடைய பணியை சமுதாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது என் அவா. அவர்கள் நீடூழி வாழ இறையை இறைஞ்சுகிறேன்

அவர்களது வெளிநாட்டுச் சுற்றுலாச் செயதிகள் நூல் வடிவில் வருவது பாராட்டத்தக்கது. ஏனெனில் இந்த நூலே மருத்துவ துணையாக பல்லோருக்கும் அமைகின்றது என்பது என் கருத்து. நூலுக்கு வடிவம் தந்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

—கி இராதாகிருஷ்ணன்

பதிப்புரை

:———:

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் காலத்தில் வாழ்கின்ற நாம் நெஞ்சம் மகிழ்கின்றோம். இலக்கணமும் இலக்கியமும் மட்டும்தான் இன்பத் தமிழ் இவ்வுலகிற்கு ஈந்தது என்ற எண்ணத்தை மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை மலர்ந்துவிட்டது. அறிவியலின் பல்வேறு துறைகளிலும் பண்டைய தமிழகம் பண்பட்டிருந்தது என்பது இப்பொழுது தெரிய வருகிறது. குறிப்பாக மருத்துவத்துறையில் தமிழகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறப்பின் சிகரத்தில் சீர்பெற்றிருந்தது.

தமிழ் மருத்துவத்தின் மாண்பை மறுமலர்ச்சித் தமிழகத்தில் அறிமுகம் செய்யும் அரிய பணியை அறிஞர் பலராமய்யா மேற்கொண்டுள்ளார். சித்த வைத்தியத்தின் சிறப்பை விளக்கும் அவருடைய ஆய்வு நூல்களை வெளியிடும் வாய்ப்பு வசந்தா பதிப்பகத்திற்கு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது போன்று பல்வேறு துறைகளிலும் பண்பட்ட தமிழறிஞரின் படையல்களைத் தொடர்ந்து வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளேன். இக்கன்னி முயற்சியை தமிழறிந்தார் வரவேற்பர் என்பது என் நம்பிக்கை.

பலராமய்யாவின் மலேசிய–சிங்கைச் சுற்றுலாவைச் சித்தரிக்கும் இந்நூலில் அவருடைய வரலாறு, சித்த வைத்தியத்தின் சிறப்பு, அவர்தம் நூல்கள் பற்றிய திறனாய்வு, அவர் பங்குபெற்ற நிகழ்ச்சிகளின் நாளிதழ்ச் செய்திகள் போன்றவை இடம் பெற்றுள்ளன. சித்த வைத்தியம் பற்றி அறிய விரும்புவோருக்கு இச்சிறிய நூல் நுழைவாயிலாகும். இதனைத் தொகுத்தளித்த ஆசிரியரைப் பாராட்டுகிறேன்.

கே. சண்முகம், பி. ஏ., பி எல்.
சென்னை–4.

ஆசிரியர் பேசுகிருர்

தமிழ் கூறும் நல்லுலகிற்கு நன்கு அறிமுகமானவர் சித்தவைத்தியமணி பலராமய்யா. சித்தவைத்தியத்தைக் கலையாகக்கொள்ளும் சிறப்பு அவருக்கே உரியது கலை பாயும் உள்ளத்தோடு அலைபாயும் கடல் தாண்டி மலை பாயும் நாட்டிற்குச்செல்ல வேண்டும் என்று விரும்பினர் பலராமய்யா. இருந்து இல்வாழ்வதெல்லாம் விருந்தின் பொருட்டே என்னும்பெருங்கொள்கையோடு வாழ்கின்ற வள்ளுவமணி வள்ளல் ரெஞ அருந்தமிழ் மகனுரை வர வேற்பதில் பேருவகை கொண்டார். கிழக்கின் முத்தாம் பினங்கில் வள்ளலின் விருந்தினராய் தங்கி இருந்தார் தமிழ் மருத்துவத்தின் காவலர். தாவூத்ரெஸ்டாரண்ட் உரிமையாளர் வள்ளல் மணி யூசுப், அலியார் பி. ஏ. ஏசியன் பிரிண்டர்ஸ் நிர்வாகி பி. சாமி, பினங்கு முன் ஞள் முதல் மாஜிஸ்திரேட் மாண்புமிகு சச்சிதானந்தம், பட்டர்வொர்த் தொண்டர்மணி வீ. எஸ். மணியம், அருள்நெறிச்செல்வர் இலட்சுமணன், டாக்டர் பிள்ளை, அலோர் ஸ்டார் சீனிவாசன் செட்டியார் போன்ற பிர முகர்கள் சித்த வைத்தியச் செல்வரின் வடமலாயா சுற்றுலா வெற்றி பெற வகை கண்டனர்.

மலேசியத்தலைநகரில் மாவட்ட நீதிபதியை வாஞ் சையோடு வரவேற்றவர் மலேசிய வானெலி இந்தியப் பகுதித் தலைவர் பாலகிருஷ்ணன் எம். ஏ. ஆவார். பலராமய்யாவின் வானெலிப் பேச்சுக்கும் தொலைகாட்சி நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்தார் அவர். தலைநகர் தமிழ் முரசு பணிமனை துணையாசிரியர் திரு. தேவா சிறப்பாகச் செய்திகளை வெளியிட்டார். தமிழ் நேசன் திரு ந‌‌‌‌ னம்

பலராமய்யாவின் நூல்களுக்கு நல்ல மதிப்புரை நல்கினர்.

ஜோகூர் திரு. நடேசன் செட்டியார் பலராமய்யாவின் தென் மலேசியப்பயணத்திற்கு பயனளிக்கும் வகையில் பணிபுரிந்தார்.

சிங்கையில் சித்தவைத்தியத்தின் சிறப்பைப்பரப்ப பெருந்தொண்டாற்றி வருபவர் செந்தமிழ்ச்செல்வர் முத்தமிழ்க்காவலர் தமிழவேள் கோ. சாரங்கபாணி. பலராமய்யாவின் சிங்கைச்சுற்றுலா வெற்றிகாண எல்லா வகையிலும் ஏற்பாடு செய்தார் தமிழவேள். தமிழ் முரசு துணையாசிரியர் எம். சிதம்பரத்தின் நூல் திறனய்வு மிகச்சிறப்பாக அமைந்தது. அருள்நெறிச்செல்வர் சண்முகம் செட்டியார் அருகிருந்தே பலராமய்யாவை உபசரித்தார்.

மருத்துவமாமேதை பலராமய்யாவின் செய்திகளைப் பாராட்டத்தக்க முறையில் பத்திரிகையில் வெளியிட்ட தமிழ்முரசு, தமிழ் நேசன், தமிழ் மலர், ஸ்டிரெய்ட்ஸ் எக்கோ [Straits Echo] நாளிதழ் ஆசிரியர்கள், மலேசிய-சிங்கை வானெலி தொலைகாட்சி நிறுவனத்தார் அனைவருக்கும் நெஞ்சுவக்கும் நன்றி.

பலராமய்யாவின் சுற்றுலாச்செய்திகளை நூல் வடிவாக்க முன்வந்த வசந்தா பதிப்பக உரிமையாளர் கே. சண்முகம் பி.ஏ;பி.எல். பாராட்டிற்குரியவர்.சித்தவைத்தியம்சிறப்பெய்த வேண்டும் என்றசிந்தையுடைய அன்பர் சண்முகம் (நீடுழி வாழ வழி; உங்கள் வீட்டில் சித்த மருந்து, சித்தர்மெய்ப்பொருள்,சித்தர்கைகண்டமருந்து) ஆகிய நூல்களை வெளியிட்டதின் மூலம் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்துவிட்டார்.

பல்வேறு பணிகளுக்கிடையில் பலராமய்யாவின் சுற்றுலாவைச்சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பன்னூலாசிரியர் பன்மொழிப்பண்டிதர் மௌலவி ஹாபிஸ் பாஜில் முஹம்மத் யூசுப் பாக்கவி அவர்களுக்கும் "நூருல் இஸ்லாம்" பணி மனை அன்பர்களுக்கும் நன்றி.

மதிப்புரைகள் வழங்கிய அச்சுத்துறை இயக்குநர் கோமேதகவேலு எம். ஏ., ஐ. ஏ. எஸ்.; பேராசிரியர் கவிமணி கா. அப்துல் கபூர் எம். ஏ.; திரு. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. எல்.; தமிழ் புரசு திரு. இராதா கிருஷ்ணன் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு இசைந்த சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் மாண்புமிகு நெ. து. சுந்தரவடிவேலு எம். ஏ., எல். டி. அவர்களுக்கு மனமுவந்த நன்றி.

அழகிய முகப்பை வரைந்தளித்த ஓவிய அன்பர் எஸ். கே. ஹுசைன் அவர்களுக்கும் நன்றி. ஆலோசனை பல கூறிய அண்ணன் ஜனாப் அப்துல் குத்தூஸ் பி. காம்., அவர்களுக்கு நன்றி.

இத்தகைய முத்துத்தமிழ் நூல் தமிழ் இலக்கிய வானில் முளைப்பது இதுவே முதன் முறை. தமிழறிந்தோர் படித்துப் பயன் பெறுவர் என்பது என் எண்ணம்.

—பட்டர்வொர்த் ஜைனுத்தீன்

1669, ஜாலான் கம்போங் காஜா

பட்டர்வொர்த் (பி. வெ.) மலேசியா.

சிறப்புக் கட்டுரை —

சித்த மருத்துவ அறிஞர்

[இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. லிப்.]

(நூலகர், மறைமலையடிகள் நூலகம்)

பண்டைத் தமிழரின் மருத்துவ நெறி சித்த மருத்துவமாகும். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கக்கூடிய மூலிகைகளை ஆதாரமாகக்கொண்டு சிறந்தோங்கி வளர்ந்திருந்த சித்த மருத்துவக்கலை, காலப்போக்கில் பின்பற்றுவாரின்றி வழக்கில் அருகியுள்ளது. இன்றும் தமிழ்நாட்டுத் தாய்மார்கள், 'கைப்பக்குவமாக' நோய்களுக்குக் கொடுக்கும் மருந்துகள், இச் சித்த வைத்திய முறையைப் பின்பற்றியதே.

இக்கலையின் பெருமை குன்றியுள்ள இந்நிலையில் இதன் புகழை மீண்டும் நிலைநாட்ட வேண்டுமென்று அயராது பாடுபட்டுவருபவர் மாவட்ட நடுவர் மாண்புமிகு வி. பலராமய்யா பி. ஏ, பி. எல். அவர்கள். தமிழக அரசின் நீதித்துறையில் மிகச்சிறப்பான பணியையாற்றி வரும் அறிஞர், தம் வேலை நேரத்தைத்தவிர பிற பொழுதையெல்லாம் சித்த மருத்துவ ஆராய்ச்சியிலும், தம் வீடு தேடி வருகின்ற நோயாளிகட்குச் சித்த மருத்துவத் தொண்டு செய்வதிலும், சித்த மருத்துவத்துறை பற்றி மக்கட்கு எளிதாக விளங்கக்கூடிய நூல்களை எழுதுவதிலும் செலவிடுகின்றார்.

ஆங்கில மருத்துவத்தினால் தீராத நோய்களான புற்று நோய், காச நோய் போன்ற நோய்களுக்கும் இவர் சித்த மருந்து அளித்துக் குணப்படுத்தியுள்ளார். தீராத நோய்களையெல்லாம் தீர்க்கவல்லது சித்த மருத்துவம் ஒன்றுதான் என்று தம் நூல்களில் நிறுவியுள்ளார்.

'சித்தர் கைகண்ட மருந்து' என்னும் இவரது நூல், மனிதனுக்கு ஏற்படும் நோய்களைத் தலைமுதல் கால் வரை உறுப்பு உறுப்பாகப் பிரித்து அவ்வுறுப்புக்கு ஏற்படும் நோய்கள் இன்ன இன்னவென்று விளக்கி அவற்றுக்குச் சித்த மருத்துவ முறைப்படி என்ன மருந்துகள் கொடுக்க வேண்டுமென்று தெளிவாக விளக்குகின்றது. அம் மருந்துகளை ஆயத்தம் செய்வதற்குத் தேவையான பொருள்கள், அவற்றை ஆயத்தம் செய்யும் வகை, உட்கொள்ளும் முறை, உட்கொள்ளும்போது கடைப்பிடிக்கவேண்டிய பத்திய முறை முதலிய யாவும் விளக்கப்பெற்றுள்ளன. கடுமையான நோய்களான நீரிழிவு, வாதம், புற்று நோய் முதலியவை தனித்தனிப் பகுதிகளில் விளக்கப்பெற்றுள்ளன. பெண்கள் பகுதி, குழந்தைகள் பகுதி என்பன அவரவர்க்கு ஏற்படும் தனிப்பட்ட நோய்க்குரிய பண்டுவத்தை விளக்குகின்றன.

'சித்தர் மெய்ப் பொருள்' என்னும் நூல் மேற்கூறிய 'சித்தர் கைகண்ட மருந்து' என்னும் நூலைத் தன்னுள் அடக்கியிருப்பதோடு தமிழ் நாட்டுச் சித்தர்களின் பெருமையையும் எடுத்தோதுவது. சித்தர்கள் என்பார் யாவர்? அவர்கள் தம் சிறப்பு என்ன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டி, பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் அவர்கள் என்பதை இந்நூலில் ஆசிரியர் காட்டியுள்ளார். திரு பலராமய்யா அவர்கள் தாம் வாழ்வில் பழகிய பல சித்தர்களைப் பற்றியும் அவர்களால் தாம் பெற்ற அறிவுப் பரப்பையும் நமக்கு இந்நூல் வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார். சித்தினால் பொன்னைக் கூட உண்டாக்க முடியும். ஆனால் அது அல்ல மெய்ப்பொருள். நெடுநாள் மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்து காட்டுவதே சித்தர் மெய்ப்பொருள் என்பதை இந்நூலைப் படிப்பவர் உணரலாம்.

'உங்கள் வீட்டில் சித்த மருந்து' என்னும் சிறுநூல் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய நூல். ஆங்கில மருத்துவம் மெய்க்காயம்

பட்டதற்கு முதல் உதவி செய்யும். சித்த மருத்துவம் எல்லா நோய்களுக்குமே முதல் உதவி செய்யும். அவ்வாறு நோய் பலவற்றிற்கும் அது ஏற்பட்ட முதல் நிலையிலேயே வீட்டிலுள்ள அன்னையர் கைபக்குவமாகச் செய்யக்கூடிய முதல் உதவிகளை விளக்குவது இச் சிறு நூல். இது முதல் உதவி மட்டுமன்று; நோயை முற்றுமகற்றக்கூடிய முழு உதவியுமாகும்.

'நீடூழி வாழ வழி': இச்சிறு நூல் மனிதன் நோயுருதவகையில் எவ்வாறு வாழவேண்டும் என்று வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூல். நோயுற்றபின் பண்டுவம் பார்ப்பதைவிட நோயே ஏற்படாதவகையில் உடலைப் பேணிக் கொள்வதே அறிவுடைமை. அதற்குப் பெரிதும் உதுவுவது இந்நூல்.

இத்தனை நூல்களையும் மக்கள் எளிதாகப் படித்தறிந்து கொள்ளும் வகையில் சிறப்பாக எழுதியுள்ள திரு. பலராமையா அவர்கள் சிறந்த சித்த மருத்துவ அறிஞர் என்பதில் ஐயமில்லை. அவர் சித்த மருத்துவத்தின் பெருமையைப் பரப்புவதற்காக உலகத் தமிழ் மாநாட்டில் தனி சித்த மருத்துவ அரங்கையே நிகழ்த்தினார். அண்மையில் மலேசியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து சித்த மருத்துவத்தின புகழைப் பரப்பி வந்துள்ளார். மலேசியாவில் பல பொதுக் கூட்டங்களிலும் வானொலியிலும் தொலைக் காட்சியிலும் தோன்றிப் பண்டைத் தமிழ் மருத்துவ முறையைப் பாரறியச் செய்துள்ளார். இவர் தம் தொண்டு என்றும் நிலைபெறுக.

"நீதிபதி பலராமய்யா நீடு வாழ்க!"

:———:

(பட்டர்வொர்த் ஜைனுத்தீன், பி. எஸ்ஸி.)

அன்பும் பண்பும் ஆள்கின்ற
    ஆழ்ந்த அறிவு அடைந்தவராம்
முன்பும் பின்பும் வாழ்கின்ற
    முறையைச் சொல்லும் முதியவராம்
இன்பம் இலகும் மொழிபேசி
    இதயம் அள்ளும் இனியவராம்
துன்பம் துடைக்கும் பலராமர்
    தூயோன் அருளால் வாழியவே!

வானில் கடலில் வையத்தில்
    வளரும் செடியில் மாமலரின்
தேனில் இலையில் கனிவகையில்
    தேங்கி நிற்கும் மாமருந்தால்
ஊனில் உறையும் உயிருக்கு
    உறவை ஓங்கச் செய்கின்ற
நானில் மார்க்கம் நவில்கின்ற
    நல்லார் பலராம் வாழியவே!

புத்தர் ஈஸா மாநபிகள்
புகழைப் போற்றும் அருட்செல்வர்
சித்தர் கண்ட மெய்யன்பின்
சிறப்பைப் பேசும் அறிவருவி
நித்தம் மனிதன் இயற்கையுடன்
நீள் துயில் போக்கி நிலைகாண
முத்தம் போன்ற அன்புவழி
முழக்கும் பெரியார் வாழியவே!

சாதித் துறையை வெறுக்கின்ற
சான்றோர் பலரா மய்யாவின்
நீதித் துறையோ சமன்செய்து
நிற்கும் கோலைப் போன்றதுவாம்
காதில் தேனைப் பாய்ச்சுகிற
கம்பன் தலைவன் பெயர்கொண்டார்
ஆதி இறைவன் துணையாலே
ஆண்டு கோடி வாழியவே!

("தமிழ் முரசு", 30-4-69)

சித்த வைத்தியமணி

—:—

புலவர்களும்—கவிஞர்களும் தமிழை வளர்த்தன ரென்ருல், அதற்கு நவீன உலகில் உரிய இடம் கிடைக்கச் செய்ததில் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்களுக்குச் சிறப்பிடம் நிச்சயம் உண்டு. தமிழில் பல்வேறு துறை ஆராய்ச்சிகளை முன்னின்று நடத்தி—அதற்கு "புது நிலை" தோற்றுவித்ததில் வழக்கறிஞர்களுக்கு அரும் பங்கு உண்டு.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பம்மல் சம்பந்த முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ரா. பி. சேதுப் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை போன்ற நீதிபதிகளும்—வழக்கறிஞர்களும் முத்தமிழுக்கு ஆற்றிய பணி கொஞ்சமா? அந்த மரபையொட்டி—தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவ நெறிக்கு இப்பொழுது அரிய தொண்டாற்றி வருபவர் நடுவர் வி. பலராமையா அவர்கள். சித்த மருத்துவ முறையை, சமீபகாலம் வரை, நவீன மருத்துவ உலகம் "விஞ்ஞான ரீதியான முறை" என்று ஏற்றுக்கொண்டதில்லை. ஆனல், இப்பொழுதோ நிலைமை மாறி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் "இது முழுக்க முழுக்க விஞ்ஞான முறையே" என்பதை பலராமையா போன்றவர்கள் "காரண—காரிய" ரீதியில் அசைக்க முடியாத தர்க்கத்தாலும், அறிவுக்குப் பொருத்தமான வாதத்தினலும் நிலைநாட்டி வருவதே ஆகும்.

தமிழின் சார்பில் ஆங்கிலப் பித்தர்களுடன் வழக்காடி அதற்கு வெற்றியைத் தேடித்தந்த வழக்கறிஞர்களைப்போல, தமிழ் மருத்துவத்தின் சார்பில் வழக்காடி வருபவர் பலராமையா அவர்கள். இவர் பிறந்ததோ விவசாயக் குடும்பம்; படித்ததும் சட்டம்; வகிப்பதோ நீதிபதித் தொழில். ஆனல், அவர் விரும்பி வாழ்வதோ "சித்த மருத்துவ உலகில்"! சென்னையில் இரண்டு ஆண்டுகட்கு முன் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில்

சித்த மருத்துவக் கருத்தரங்கில் இவர் ஆற்றிய உரை எடுப்பாக நின்றது; எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

சட்டப் படிப்புக்கும்— சித்
என்ன சம்பந்தம்—எப்படி இருக்க முடியும் என்கிறீர்களா? இதற்குக் காரணம் அவருடைய இளமை வாழ்வில் இருக்கிறது.

தாயே-முதல் ஆசான் -

பலராமையா ஒரு பெரிய விவசாயியின் மகன்; சொந்த ஊர் வட ஆர்ககாடு மாவட்டத்தில் வந்தவாசிக் கருகேயுள்ள எரும்பூர் கிராமம்; விஜயராகவலு நாயுடு என்ற பெருநிலக்காரரின் மகன். பலராமையாவின் தாயாருக்கு கைம் முறையாக பலவிதமான சிகிச்சை முறைகள் தெரியும். குழந்தை வியாதிகள் பலவற்றிற்கு தோட்டத்துப் பச்சிலைகளையும், சில கைம்முறை மருந்துகளையும் கொடுத்து அந்த அம்மையார் குணப்படுத்தி விடுவார்.

"தடுமன்" என்றாலும் இப்பொழுது "எம். டி" படித்த பெரிய டாக்டரிடம் ஓடுகிறார்கள். அந்த நாளில் குழந்தை நோய்களில் பலவற்றைத் தாய்மார்கள் உள்ளூரிலுள்ள பெரிய மனுஷிகளை நாடி அவர்கள் சொல்லும கைம்முறை சிகிச்சையில் குணப்படுத்திவிடுவார்கள. அந்த முறையில் பலராமையாவின் தாயார் அந்தக் கிராமத்து டாக்டர்; கட்டணம் வாங்காத டாக்டர்.

ஒரு குழந்தைக்குத் தலையில் இரண்டு பெரிய கட்டிகள் வந்துவிட்டன; அதன் தாய் ஓடிவந்து பலராமையாவின் தாயாரிடம் கதறினாள். "இவ்வளவு தானே—சும்மாயிரு. சரிப்படுத்திவிடலாம்" என்று கூறிவிட்டுத் தோட்டத்துக்குப் போனார்; கூடவே சிறுவன் பலராமையா, தாயைப் பின் தொடர்ந்தான். தாயார் முள் முள்ளிச் செடியின் வேரைப் பறித்து, சுட்டு தேங்கா யெண்ணெயில் குழப்பி, தடவச் சொன்னதைப் பார்த்

துக்கொண்டிருந்தான் பையன். சில மணிகளில் கட்டி உடைந்தது; குழந்தை குணமாகிவிட்டது.

"இந்தச் செடியின் வேர் வைத்து கட்டினால், கட்டி குணமாகிவிடுகிறதே. அப்படியென்றால், இநத செடிக்குள் ரணசிகிச்சைக் கருவியும்—அதனுடன் கூடவே மருந்தும் உள்ளே இருக்கிறதுபோலும்" என்று சிறுவனின் மனம் நினைக்க ஆரம்பித்தது. ஊர் முழுதுமே தன் தாயாரைப் புகழ்வதைக் கண்ட சிறுவனுக்கு, தாயாரின் மருந்துகளைத தானும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை வந்தது.

அன்றிலிருந்து தாயாரின் கைம்முறைகளை எல்லாம் உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தார். சுக்கு, மிளகு, சீரகம் போன்ற சாதாரண அஞ்சனப்பெட்டி சாமான்களைக்கொண்டும், வேம்பு, கீழாநெல்லி, குப்பமணி போன்ற இலைகளைக் கொண்டும் எத்தனை வியாதிகளைக் குணப்படுத்த முடியுமென்பது அத்துபடியாகி விட்டது பலராமையாவுக்கு. அவருடைய தாயாருக்கு "நாட்டு மருந்து—கைம்முறைகளை" மற்றவர்களிடம் புதிது புதிதாகக்கேட்டுத்தெரிந்துகொள்வதில் கொள்ளை ஆசை. இதற்காக காவி கட்டிய சந்நியாசிகள் யார் வந்தாலும், அவரை உபசரித்து, விருந்துபோட்டு, அவர் மூலம் புதிதாக "கைம்முறைப்பாகம்" எதையாவது தெரிந்துகொள்ள முடியுமா என்று முயலக்கூடியவர் தாயார். இதை எல்லாம் கவனித்து வந்தார் பலராமையா. எனவே, "என்னுடைய மருத்துவ ஆசான் என் தாய்" என்று அவர் சொல்லலாம் அல்லவா?

ஒரு பெரிய வித்தியாசம் -

மற்றவர்களுக்கும் பலராமையாவுக்கும் ஒரு பெரிய வித்தியாசம். "ஊருக்கு உபதேசம்—எனக்கு இல்லை" என்பது அவருக்குத் தெரியாதது. ஒன்று "சரி" என்று அவருக்குப் பட்டுவிட்டால். முதலில் அதைத் தானே செய்வார். "ஆங்கில மோகமே ஒழிய வேண்டும்; பிஞ்சு-

மனத்திற்குத் தமிழே தாய்ப்பால்'' என்று மேடையில் முழங்கிவிட்டு, முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் போதனை நடக்கும் பறங்கிக் கான்வென்ட் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பி "டேடி; மம்மி" கற்கச் செய்து பூரித்துப் போகும் தமிழன்பர்கள் நிறைந்த தமிழகத்தில் பல ராமையா அலாதி மனிதர். "நினைப்பு நம்பிக்கை வேறு, செயல் வேறு'' என்ற கெட்டிக்காரத்தனம் அவருக்குத் தெரியாதது.

சித்த மருத்துவ முறை மீது இளமையிலேயே அவருக்கு நம்பிக்கையும், ஆர்வமும் வந்துவிட்டதல்லவா? அன்றிலிருந்து இன்று வரை அவர் வீட்டில் அவருடைய குடும்பத்தினர் தமிழ் மருத்துவ முறையைத் தவிர வேறு எதையும் அனுசரிப்பதில்லை. இளம் வயதிலேயே அவருக்கு இம்முறை மீது எவ்வளவு பிடிப்பு இருந்திருக்கிறது? இவர் எப். எல். படித்துக்கொண்டிருந்தபோது, இவருடைய மனைவியாருக்கு திடீர்க் கருச்சிதைவு ஏற்பட்டு கர்ப்பப்பையில் இரத்தம் கட்டி, நஞ்சாக மாறி, ஜன்னியில் வைத்துவிட்டது. ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு செல்ல உறவினர்கள் பதைத்தார்கள். ஆயினும் பலராமையா அசையவில்லை; தாமே சித்த மருந்துகளைத் தந்து குணப்படுத்தினர். கொண்ட கொள்கையில் அவ்வளவு திடமும் அழுத்தமும் உடையவர்.

பொழுது விடிந்ததும் எத்தனை பேர்? -

நோயின் கூறுகள், நோய் நாடல், அது தணிக்கும் வாய் நாடல், வாய்ப்பச்செயல் ஆகிய அத்தனையிலும் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், மருந்து தயாரிக்கும் முறைகளிலும் பழகித்தேறி இருக்கிறார். இம்முறைகளை அனுபவசாலிகளிடமிருந்து கற்றுக் கொள்வதற்கும், மருந்துகளை முறைப்படித் தயாரிப்பதற்கும் தமது சொத்தில் பெரிய பகுதியையே செலவிட்டுவிட்டார். பூர்வீகச் சொத்துக்களுக்குப் பிறகு இப்பொழுது அவரிடம் இருக்கும் சொத்து இந்த

மருத்துவ அறிவு ஒன்றுதான். பொழுது விடிந்ததும் எத்தனை பேர் காத்து நிற்கிறார்கள் அவர் வீட்டு வாயலில் வரிசையாக! அவரவர் நோயைப் பொறுமையாக விசாரித்து நாடி அறிந்து, மருந்துகளைத் தருகிறார் இலவசமாக. ஏழை பணக்காரர் என்ற பேதா பேதமின்றி, குறிப்பாக காமாலை நோய்க்கு இவர் அளித்து வரும் சிகிச்சை மறக்க முடியாதது. சமீப காலத்தில் சென்னையில் எண்ணிறந்த பேர்களை இந்தக் கொடிய நோய் தொட்டுவிட்டது. இவர்களில் எத்தனையோ பேர்கள் பலராமையாவின் மருந்தால் பூரண குணம் அடைந்தார்கள். ஐந்தே நாட்களில் சொஸ்தப்படுத்தி விடுகிறார். 'தமிழ் முரசு'வின் தமிழகப் பிரதிநிதியும் காமாலை நோய் முற்றிய நிலையில், திரு. பலராமையாவின் உயர்ந்த மருந்துகளினால் விரைவில் குணம் அடைந்தார்!

அடுத்து, புற்றுநோயில் சில வகைகளைக் குணப்படுத்திவிட முடியுமென்கிறார் பலராமையா. அப்படிச் சொல்லிவிட்டு, புற்றுநோய் என்றால் சித்த முறைப்படி என்ன—என்பதற்கு விளக்கமும் தந்தார்.

ஆறாத ரணங்கள், தீராத குன்மங்கள், ஆறாத கட்டிகளாயிருந்தால் அலோபதிக்காரர்கள் உடனே அதை புற்றுநோய் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் புற்றுநோய் என்றால் புற்று வைத்ததுபோலவே இருக்கும். அந்த நோய் ஒருவருக்கு வருமானால், முதல் அறிகுறி அவருடைய நா தனது ருசியை இழந்து விடும். புற்றுநோய் வருவதற்கு காரணம் உடலிலுள்ள ரத்தம் முழுக்க முழுக்க விஷமாகிவிடுவதேயாம். ஆதலால், ரத்தத்தை சுத்தி செய்யும் முறைகளைக் கையாண்டால் புற்று நோய் குணமாகிவிடும் என்கிறார்.

புற்றுநோயை மருந்து கொடுத்தே குணப்படுத்தியவர் –

புற்றுநோயினால் சொல்லொணா அவதியுற்ற மாது ஒருவருக்கு மருந்து கொடுத்தே (ஆபரேஷன் தேவை

யின்றி) குணப்படுத்திய வரலாற்றை அவர் சொல்லும் பொழுது புல்லரிக்கிறது. இது குறித்து அவரே கூறிய விவரம்:

சென்னை அயனாவரத்தைச் சேர்ந்தவர் குமுதவல்லி என்பவர்; அவருடைய கணவர் மாஜிஸ்டிரேட் அலுவலகத்தில் பணியாற்றுபவர். பெயர் வெங்கடேசன் என்பது. இவர்களுக்கு ஐந்து குழந்தைகள். குமுதவல்லிக்கு மார்பகததிற்குள கச்சைக்காய் அளவுக்கு ஒரு கட்டி வந்தது; வரவர அது முட்டை அளவுச்கு வளர்ந்து விட்டது. கீழ்ப்பாக்கம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் நோயாளி. பரிசோதனைகள் நடந்தன. கடைசியில் புற்றுநோய் என்று தீர்மானிக்கப் பட்டு, ஒரு மார்பையே ஆபரேஷன் மூலம் அகற்றி விடுவதைவிட வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். ஆனல், நோயாளியோ ஆபரேஷன் செய்து கொள்ள அஞ்சி, வீடு திரும்பிவிட்டார். கடைசியில் நோயாளியின் கணவராகிய வேங்கடேசன், மனைவியின் சோக வரலாற்றைப் பலராமையாவிடம் தெரிவிக்கவே, அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு சித்த முறைப் படி பலராமையா சிகிச்சை அளித்தார்.

ஒரு மாதத்துக்குள் கட்டி கரைந்துவிட்டது–படிப் படியாக! கடுமையான பத்தியம்–மருந்துக்கு. சென்னை மருத்துவ வட்டாரத்தில் இந்த நிகழ்ச்சி பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

"புற்று நோய்களில் எத்தனையோ வகைகள் உள் ளன. அவற்றில் பலவகை குணப்படுத்தக் கூடியன" ஆரம்ப கட்டத்திலேயே தகுநத கவனத்தைப் போதிய அளவுக்கு அளித்தால். ஆனல் கத்தியையோ அல்லது கோபால்ட்தெராபி முதலிய எரிப்பு சாதனங்களையோ உபயோகப்படுத்திய பிறகு எந்த மருத்துவமும் புற்று நோயைக் குணப்படுத்த முடியாது.

"இப்படிச் சொல்லுவதில் எனக்கு ஏதும் பெருமையில்லை. இந்த மருந்துக்குத்தான் பெருமை" என்கிருர் பலராமையா.

தனி அழகு –

இலவச வைத்தியம் மூலமாக தமிழ் மக்களுக்கு அவர் செய்துவரும் சேவை அளவுக்கு எடுப்பானது என்ன வெனில், சித்த முறைக்கு 'விஞ்ஞான ரீதியாக' காரண காரியவாதங்களில் அவர் தந்து வரும் விளக்கமே.

தமிழரின் வாழ்வியல் நெறிகளும், சமையல் முறை யும், பண்டங்களும் 'விஞ்ஞான ரீதியாக' அமைந்தவை. சமையல் பாகத்தில் சேர்க்கப்படும் மிளகு, சீரகம், பூண்டு, கடுகு போன்றவை ருசியுடன் உடம்பைப் பேணும் ஔடதங்கள். இது தமிழர் உணவு முறை யின் தனி அழகு என்கிறார்.

ஆயுர்வேதத்தைவிடவும் சிறப்புடையது சித்த மருத்துவம் என்கின்ற பலராமையா, 'அது எப்படி?' என்பதையும் விளக்குகிறார்.

"மூலிகைகள், வேர்கள், குழைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது ஆயுர்வேதம். இம் முறை யினால் சாத்தியமான நோய்களையே குணப்படுத்த முடி யும். ஆனால் சித்த முறையினாலோ அசாத்திய நோய் களையும் குணப்படுத்த முடியும். சித்த மருத்துவ முறை யின் அடிப்படைக் கூறுகள் மூன்று: மூலிகை, பாஷா ணம், உலோகம். சித்தவைத்தியத்தில் அரிய கலை, பாஷாணங்களைக் கட்டுவது" என்று கூறிவிட்டு, "சித்த மருத்துவம் பூரணமான பிறை, இதன் மூலம் 4448 வித நோய்களைக் குணப்படுத்த முடியும்" என்று பெருமிதத் துடன் கூறுகிறார்!

தமிழகத்தில் பலராமையா கலந்துகொள்ளாத சித்த மருத்துவ மாநாடே கிடையாது எனலாம். இரண் டாண்டுகட்கு முன், சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் 'உங்கள் வீட்டில் சித்தா மருந்து' என்ற தலைப்பில் இவர் நிகழ்த்திய ஆய்வுரை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

அண்ணாவைக் கவர்ந்தவர் –

சித்த மருத்துவ வளர்ச்சியைக் குறியாகக்கொண்ட மாநில ஆட்சியாளர் நிறுவிய பல குழுக்களில் இடம்

பெற்றவர் பலராமையா.

சித்த வைத்திய பாட நூல் குழுவில் இவர் ஓர் உறுப்பினர். அரசு நியமித்த மருந்துகள் தர நிர்ணயக் குழுவின் தலைவர். தஞ்சையிலுள்ள சரஸ்வதிமகால் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவில் உறுப்பினர். எவ்வித ஊதியமுமின்றி பணியாற்றுகிறார். இவருடைய பேச்சு, மூச்சு, கனவு, நனவு எல்லாம் 'சித்த மருத்துவம் அதற்குரிய உன்னத இடத்தைப்பெறவேண்டுமே' என்பதுதான்.

இதைக் குறிக்கோளாகக்கொண்டு இவர் சில அரிய நூல்களைத் தமிழில் எழுதியிருக்கிறார். இவை சித்த மருத்துவத்தின் 'விஞ்ஞான ரீதியான' அடிப்படையையும அதன் பல்வேறு உட்கூறுகளையும் விளக்குவது. அவை அறிஞர் அண்ணாவைக் கவர்ந்த நூல்கள். அண்ணாவின் கல்லூரித் தோழருங்கூட பலராமையா. அண்ணா தமிழுக்கும் தமிழினத்துக்கும் 'புது வாழ்வு' தர அரசியலில் நுழைந்தார். ஆனால், பலராமையா தமிழ் மருத்துவத்துக்குப் புத்துரு தருவதில் முழு நாட்டம் கொண்டிருக்கிறார்.

1968 ஆரம்பத்தில் அண்ணா அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது (யேல் பல்கலைக்கழக அழைப்பினை ஏற்று) சித்த மருத்துவ முறை குறித்து அங்கு சிலர் கேள்வி எழுப்பியபோது—பலராமையாவைக் குறிப்பிட்டு, "அவருக்கு எழுதி எல்லா விவரமும் தெரிந்துகொள்ளுங்கள். அந்த மருத்துவ முறையின் நிபுணர் அவர்" என்று அண்ணா கூறியது நினைவு கூறத்தக்கது.

—தமிழ்ச்சிட்டு

("தமிழ் முரசு", 13-4-69)

சித்த வைத்தியத்தின் சிறப்பு

—.—

மலேசியாவில் சித்தவைத்திய நிலையம் அமைத்தால், தான் அடிக்கடி மலேசியாவிற்கு வந்து சித்த வைத்திய முறைகளைக் கற்றுத்தருவதற்கும், சித்த வைத்தியத்தைப் பலர் அறிந்துகொள்வதற்கும் உதவி செய்யத் தயாராக இருப்பதாய்த் தமிழகத்திலிருந்து இந்நாட்டிற்கு வந்திருக்கும் சென்னை மாவட்ட நீதிபதியும், சித்த வைத்திய மேதையுமான திரு. வி. பலராமையா 'நேசனு'க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சித்த வைத்தியத் துறையில் முப்பது ஆண்டு காலம், ஐம்பதாயிரம் ரூபாய் செலவு செய்து திரு. பலராமையா கண்டுபிடித்துள்ள உண்மை மருத்துவ விளக்கங்களும், இயற்கை மருந்துகளும் ஏராளம்.

தமது கண்டுபிடிப்புகளை அவர் பல புத்தகங்களாய் எழுதியுள்ளார். அவற்றின் வாயிலாக மக்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்.

திரு. பலராமையா மலேசியாவில் சித்த மருத்துவம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை நேரில் கண்டறியும் நோக்கத்துடன் குறுகியகாலப் பயணத்தை மேற்கொண்டு மலேசியா வந்துள்ளார்.

சித்த மருத்துவத்திற்கு தமிழ் நாட்டில் நல்ல வரவேற்பு இருப்பதாகக் கூறிய திரு பலராமையா, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் பல இடங்களில் சித்த வைத்தியம் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் சென்னை அரும்பாக்கத்தில் சித்த வைத்தியத்திற்காக 100 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சித்தர்களும், முனிவர்களும் சித்த வைத்திய முறைகளை இரகசியமாக வைத்திருந்ததால், அது அவர்களுடனேயே அழிந்துபோகும் தன்மை பெற்றதாக இருந்து வந்திருக்கிறது. தான் அவ்வாறு செய்யப்

போவதில்லை என்றும், இந்த சித்த வைத்திய முறைகளைத் தன்னால் இயன்ற அளவு பரப்பப்போவதாகவும் அவர் கூறினர்.

30 ஆண்டு அனுபவம் -

தன்னுடைய தாயார் அந்தக்காலத்தில் குழந்தை வைத்தியம் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார் என்றும், இதுவே சித்த வைத்தியத்தில் தமது ஆர்வத்தைத் தூண்டியதாகவும் திரு. பலராமையா கூறுகிருர்.

திரு. பலராமையா தம்முடைய 30 ஆண்டு ஆராய்ச்சியில் கண்டுள்ள அனுபவங்கள் பல. அவற்றில், பழங்காலப் பாடல்களிலும், சித்தர் பாடல்களிலும் சிலேடையாகக் கூறப்படும் சித்த மருத்துவ மூலிகைகளையும் பேட்டியின்போது விளக்கினர்.

உதாரணமாக,

'காலையில் இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய், மண்டலம் உண்டால், கோலை ஊன்றி குறுகி நடப்பவன், கோலை வீசிக் குலுக்கி நடப்பனே' என்ற பாடலிலும்,

'வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது,
பூக் கொண்டு, துப்பார் திருமேனி
தும்பிக்கையான் பாதம், தப்பாமல் சார்வார் தமக்கு'

என்ற விநாயகர் காப்பிலும் கூறப்படும் சித்த வைத்திய மூலிகைகளை திரு. பலராமையா உள்ளர்த்தத்தோடு விளக்கினர்.

இரண்டாவது பாடலான விநாயகர் காப்பில், பூக் கொண்டு என்ற இடத்தில் தாமரைப் பூவையும், திருமேனி என்பது குப்பைமேனி எனும் மூலிகையையும், தும்பிக்கை என்பது தும்பைச் செடியையும் (தும்பிக்)கையான் என்பது கரிசிலான்கனி என்ற மூலிகை

யையும், பாதம் என்பது செருப்படை மூலிகையையும் பாடலில் சிலேடையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்படி பழங்காலப் பாடல்களிலேயே சித்த வைத்திய முறைகளும் மூலிகைகளும் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளன.

புற்றுநோய் சிகிச்சை -

'சித்த வைத்திய முறை மிகவும் கடுமையான ஒன்று எனப் பலர் கருதுகிறார்கள். அது தவறு; சித்த வைத்தியம் மிகவும் எளிதான முறையாகும்'.

குணமாகாத பல நோயாளிகளைப் பல டாக்டர்கள் தம்மிடம் அனுப்பி வைத்திருப்பதாகவும், சித்த வைத்தியத்தினால் தாம் அவர்களைக் குணப்படுத்தி வெற்றி கண்டிருப்பதாகவும் திரு. பலராமையா பெருமிதத்துடன் கூறினார்.

இதில் புற்றுநோய் வியாதியை, ஒரு சிலருக்கு திரு. பலராமையா சித்த வைத்தியத்தால் குணப்படுத்தி இருப்பதும் அடங்கும்.

பேட்டியின் இக்கட்டத்தில் அவர் காலம் சென்ற தமிழக முதலமைச்சர் அண்ணாதுரையைப் பற்றிக் குறிப்பிட்டார்.

அண்ணாதுரையும் தானும் பள்ளிக்கூட நண்பர்கள் என்றும் அவர் கூறினார்.

புற்றுநோய் அறுவை சிகிச்சை பெறுவதற்கு முன்னர், தான் அண்ணாதுரையைச் சென்று கண்டதாகவும், அவருக்குத் தான் சித்த வைத்திய முறைப்படி சிகிச்சையளித்திருந்தால், அண்ணாதுரை இன்னும் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருப்பார் என்றும் திரு. பலராமையா திடமாக நம்புகிறார்.

அலோபதி -

'அலோபதி' அல்லது மேல்நாட்டு மருத்துவத்திற்கு செலவிடப்படும் தொகையின் ஒரு சிறு பகுதியை சித்த வைத்தியத்திற்குச் செலவிட்டால் தீராத வியாதி

யெல்லாம் தீர்ந்துவிடும் என்பது திரு. பலராமையா வின் திட நம்பிக்கை.

"இந்த சித்த வைத்தியத்தில் இக்கால இளைஞர்கள் நம்பிக்கை கொண்டு அதை மேற்கொள்ள வேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சித்த வைத்தியத்தை ஓர் மருத்துவத்துறை என்று மட்டும் கொள்ளக்கூடாது. அதை ஓர் கலையாகப் போற்ற வேண்டும்.

சித்த வைத்தியத்தின் மூலம் நரை, திரை, மூப்பு மாறி என்றும் இளமையோடு இருக்கலாம்; மரண மிலாப் பெருவாழ்வு வாழலாம் எனும் சித்தர் மொழியில் திரு. பலராமையா முழு நம்பிக்கை கொண்டுள்ளார்.

1946–ஆம் ஆண்டில் நீதிபதியாகப் பணியேற்ற திரு. பலராமையா சித்த மருத்துவத் துறையை தமிழ கத்தில் திறம்பட செய்து வருகிறார்.

திரு. பலராமையா எழுதியுள்ள 'வாத வைத்தி யத்துக்காதி', 'சித்தர் கைகண்ட மருந்து', 'சித்தர் மெய்ப்பொருள்', 'நீடூழி வாழ வழி', 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து' போன்ற புத்தகங்கள் அடுத்த மாதத் திலிருந்து மலேசியாவெங்கும் விற்பனை செய்யப்பட விருக்கின்றன. மிகவும் எளிய முறையில் எழுதப்பட் டுள்ள இந்தப் புத்தகங்களை வைத்தே சித்த வைத்தி யத்தைச் செய்துகொள்ள முடியும் என்று திரு. பல ராமையா தெரிவித்தார்.

பேட்டி: எஸ். பஞ்சு

("தமிழ் நேசன்", 27-4-69)

புனிதப் பணி

—:—

"நோய்வந்த பின்புதான், நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பளிச்செனப் புலனுகின்றது.

"உடல் நலம் இல்லாவிட்டால், உலகமே நமக்குச் சொந்தமாயிருந்தாலும் பயனில்லை. ஆதலால், மனித வாழ்க்கை நடைபெறுவதற்கும் உயிர்களின் குறிக்கோளாகிய இன்பத்தை நுகர்வதற்கும் உடல் நலமே முதல் தேவையாக இருக்கிறது.

"என்றும் உடல் நலத்துடன் இருக்க வேண்டுமாளுல், நோய் அணுகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். நோய் வந்தபின் போக்குவதைக் காட்டிலும் வருமுன் தடுப்பதே அறிவுடைமை.

"நோய் வருமுன் தடுப்பதற்கும் வந்த நோயைப் போக்குவதற்கும் எளிய வழியொன்று இருந்தால் எவ்வளவோ உதவியாயிருக்கும். பெரும் பணச் செலவும் அலைச்சலும் அச்சமும் இன்றி உடல் நலம் பேணுவதற்கு யாராவது வழி சொன்னுல் அதனை நன்றியுடன் போற்றுவோம்.

"அத்தகைய எளிய வழி, இயற்கை வழி ஒன்று இருக்கிறது. அது தான் தமிழ்நாட்டுச் சித்த மருத்துவ நெறி. சித்த மருத்துவம், வயிற்றுப் பிழைப்பைக் கருதி உருவாக்கப்பட்டதன்று. தமிழ் நாட்டுப் பெரியார்கள் மரணமிலாப் பெரு வாழ்வு பற்றிப் பேசியுள்ளனர். அத்தகைய வைரம் பாய்ந்த உடம்பினையும் அதன் விளைவான நலத்தையும் பெறுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதுதான் சித்த மருத்துவம். ஆனுல் போலிகள் பலர், தமிழ் மருத்துவத்தின் பெயரைக் கெடுத்துவிட்டனர். சித்த மருத்துவத்தினுல் எந்த நோயையும் போக்க முடியும்" என்று பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை போன்ற பெருமக்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

பலராமையாவின் புனிதப் பணி -

அந்தப் பெருமக்களின் வரிசையில் இடம் பெற்றுள்ள சென்னை மாவட்ட நடுவர் திரு. வி. பலராமையா பி. ஏ. பி. எல். அவர்கள் இன்று நம்மிடையே சித்த மருத்துவத்தின் காவலராகத திகழ்கிறார்கள். அவர்கள் சித்த மருத்துவம் பற்றிப் பேசுவதோடும் எழுதுவதோடும் நின்றுவிடாமல் அதன் சிறப்பினைச் செயலாலும் புலப்படுத்தி வருகின்றார்கள்.

சித்த மருத்துவத்தின் விளக்கமாகப் பெரியார் பலராமையா அவர்கள் நான்கு நூல்கள் எழுதியிருக்கிறார்கள். 'நீடூழி வாழ வழி', 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து', 'சித்தர் கைகண்ட மருந்து', 'சித்தர் மெய்ப் பொருள்' என்னும் அந்த நூல்கள் எளிய நடையில் அமைந்து இளம் பருவத்தினரும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் சித்த மருத்துவ முறைகளை விளக்குகின்றன.

'நீடூழி வாழ வழி' என்பது சிறிய புத்தகம். ஆனால் அது சித்த மருத்துவத்தின் திரண்ட பொருளாக அமைந்திருக்கிறது. நோய் வருமுன் தடுப்பதே அறிவுடைமையாதலால், அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை இந்தச் சிற்றேடு தெற்றென அறிவுறுத்துகின்றது.

கதிரவன் தோன்று முன்னரே நாம் படுக்கையை விட்டு எழுந்துவிட வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லி வருகிறார்கள். ஏன்? "கதிரவனின் வெப்பம் நிலத்தில் படத்தொடங்கியவுடன் நமது உடம்பும் அந்த வெப்பத்தை ஈர்க்கத் தொடங்கிவிடுகிறது. உடல் வெப்பமான காலத்தில் தூங்கினால் மூச்சு மிகுதியாக வெளியேறும். அதனால் நமது வாழ்நாள் குறைந்து விடும். ஆதலால், கதிரவனது எழுச்சிக்கு முன் துயில் நீத்து எழுதலே நல்லது" என விளக்கம் தருகின்றார்கள் பலராமையா அவர்கள்.

"நாள்தோறும் ஒரு தடவையாவது வெளிக்குப் போகவேண்டும். ஒரு நாள் தவறினால் நமது வாழ

நாளில் ஓராண்டு குறைந்துவிடும்'' இது எவ்வளவு முக்கியமான உண்மை பாருங்கள்!

சோப்புத் தேய்த்துக் குளிப்பது எப்படி, எண்ணெய் தேய்த்துக் குளிப்பது எப்படி என்று கேட்டால், இது தெரியாதா என்ன என்று திருப்பிக் கேட்பார்கள். இவற்றில் நாம் கைகொள்ளவேண்டிய சரியான முறைகளை பலராமையா அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

உப்புச் சாப்பிடுவதால் நரையும், புளி சாப்பிடுவதால் திரையும் வருகின்றன என்று சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள. ஆதலால் நரையும் திரையும் வராத வண்ணம் உப்பும் புளியும் உண்ண வழி சொல்லுகிறது இந்தச் சிற்றேடு.

எலுமிச்சம் பழச்சாற்றுடன் சர்க்கரை கலந்து குடிப்பதுதான் வழக்கம். ஆனால் சர்க்கரைக்குப் பதிலாக உப்பு சேர்த்துச் சாப்பிடுவதே நல்லது என்பது நமக்கு வியப்பாகவே இருக்கும்.

இரவில் பால் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள் அதனை எவ்வாறு சாப்பிட வேண்டும், உணவு உண்ணும்போது இடையே நீர் அருந்தலாமா, வடை சுட்டபின் எஞ்சியுள்ள எண்ணெயை மீண்டும் பயன்படுத்தலாமா, வெற்றிலை போட்டுக்கொள்வது நல்லதா, உறங்கும்போது எவ்வாறு உறங்க வேண்டும் என்பன போன்ற வினாக்களுக்கு இந்த நூலில் விரிவான விடைகள் தரப்பட்டுள்ளன.

பொல்லாத நோய்கள் -

"முக்கியமாகக் காச நோய்க்கும் புற்று நோய்க்கும் தமிழ் மருத்துவத்தில் மருந்து உண்டா என்று கேட்கிறார்கள். உண்டு; புற்றுநோய் பற்றிச் சித்த மருத்துவத்தில் விரிவான விளக்கம் இருக்கிறது'' என்று கூறுகிறார்கள் பலராமையா அவர்கள்.

"ஆங்கில மருத்துவத்தில் சதை வளர்ச்சிக்கு மருந்தில்லை. ஆனால் சித்த மருத்துவத்தில் அறுவை

மருத்துவம் இல்லாமலேயே கட்டிகளைக் கரையச் செய்யும மருந்துகள் இருக்கின்றன" என்றும் பலராமையா அவர்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் சித்த மருத்துவம் பற்றி வேறு யாரும் எழுதியுள்ள புத்தகமெதையும் படித்துவிட்டு இப்படிச் சொல்லவில்லை. அவர்கள் சொந்தமாக மருந்துகள் செய்தும், நோயாளிகளுக்குக் கொடுத்தும் தாம் நேரில் கண்ட உண்மைகளையே எடுத்துரைக்கிறார்கள். 'சித்தர் மெய்ப்பொருள்' என்னும் நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ள காஞ்சித் தொண்டைமண்டலாதீன குரு மகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பலராமையா அவர்கள் பொருள் ஈட்டுவதற்காக இந்த நூல்களை வெளியிடவில்லை. அவர்களுக்கு 12-வது அகவையில் நீரேற்றம் என்னும் நோய் கண்டிருந்தது. எந்த மருந்தாலும் தீராத அந்த நோய் ஒரு பெரியவர் கூறியபடி செய்த சூரணத்தினால் தீர்ந்துவிட்டது. அன்று அந்தப் பிஞ்சுப் பருவத்தில் ஆழ வேரூன்றிய சித்த மருத்துவப் பற்று இன்று அவர்களிடம் வாழ்நாள் ஈடுபாடாக நிலவுகிறது.

சித்த மருத்துவத்தினால் தாம் பெற்ற பேறுகளை மற்றவர்களும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலேதான் அவர்கள் இந்த நூல்களை வெளியிட்டும் உரை நிகழ்த்தியும் சித்த மருத்துவத்தைப் பரப்பிவருகிறார்கள்.

தகுதிமிக்க பெரியார் –

இத்தகைய பணி செய்வதற்குப் போதிய தகுதி அவர்களுக்கு உண்டு. அவர்கள் தமிழக அரசின் சித்த மருத்துவப் புத்தகக் குழுவிலும் தமிழக அரசின் சித்த மருந்து தர வரையறுப்புக் குழுவிலும் உறுப்பினராக இருக்கிறார்கள். அஃதோடு, அவர்கள் தமிழக அரசின் அறநிலையப் பாதுகாப்பு மன்றம், சித்த மருத்துவ ஆராய்ச்சி மன்றம, மருத்துவ மனைகள் ஆகியவற்றின்

மதிப்பியல் மதியுரைஞராகவும் (ஆலோசகர்) மேற்பார்வையாளராகவும் பணி செய்கின்றூர்கள். இதிலிருந்து அவர்களின் தகுதியைத் தெரிந்துகொள்ளலாம்.

ஐந்தறைப்பெட்டி போதும் –

பல நோய்களைத் தீர்க்க நம் வீடுகளில் ஐந்தறைப் பெட்டியிலுள்ள சரக்குகளே போதும் என்று அவர்கள் கூறுகிறூர்கள். மருத்துவத்திற்கு இதனினும் எளிய வழி வேறு இருக்க முடியுமா? 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து', 'சித்தர் கைகண்ட மருந்து' என்னும் நூல்களில் அவர்கள் இதனை விளக்கியிருக்கிறூர்கள்.

'சித்தர் மெய்ப்பொருள்' என்னும் நூல், பலராமையா அவர்களுக்குச் சட்டம், மருத்துவம் ஆகிய துறைகளில் மட்டுமின்றித் தமிழ் இலக்கியம், சமய நூல்கள் ஆகியவற்றிலும் நல்ல தேர்ச்சி இருப்பதைப் புலப்படுத்துகிறது. சித்து என்பது யாது, சித்தர்கள் யார் அவர்களின் சிறப்பு யாது என்பன போன்ற முக்கிய பொருள்களின் விளக்கத்தை இந்த நூலில் காணலாம்.

சித்தர்கள் நிகழ்த்திய வியக்கத்தக்க சித்துகள் பலவற்றைப் பலராமய்யா அவர்கள் இந்த நூலில் விளக்கியிருக்கிறூர்கள்.

தமிழகத்துச் சித்தர்கள் பலநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அந்த நாடுகளில் முக்கியமானது சீனு.

சீனுக்கற்கண்டு, சீனப்புல், சீனக்கிழங்கு, சீனச் சுண்ணம், சீனப்பட்டு, சீன மிளகு, சீன முத்து என்னும் சொற்கள் சீனுவுடன் சித்தர்கள் கொண்டிருந்த தொடர்புக்குச் சான்றுகளாகும் என்பதை நூலாசிரியரவர்கள் எடுத்துக்காட்டுகிறூர்கள்.

அவர்களின் நூல்களில் மருத்துவச் சார்பான கருத்துகள் மட்டுமின்றித் தமிழினம் முன்னேறுவதற்கு வேண்டிய பகுத்தறிவுக்கு உகந்த சீர்திருத்தக் கருத்துகளும் நிறைந்திருப்பது போற்றத்தக்கதாகும்.

பாவாணர் வலியுறுத்து –

தமிழ்ப் பேரறிஞர் பண்டித, புலவ, வித்துவ ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள், சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பினை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதனை இங்கே தருகின்றேன்:

'தமிழ் மருத்துவக் கலை சித்தரால் வளர்க்கப்பெற்றது. அதனால் அது சித்த மருத்துவம் எனப்பெறும். கட்டிகளையும், பிளவைகளையும் கரைப்பதும், ஒடிந்த எலும்பை ஒட்டவைப்பதும், முதியவரை இளையவராக்குவதும், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்விப்பதும் சித்த மருத்துவம்.

'ஆதலால் ஊதை (வாதம்), பித்தம், கோழை என்னும் முந்நாடியையும் நாடி அதனால், இற்றைக் கருவிகளைக் கொண்டு தலைசிறந்த தேர்ச்சி பெற்ற மேலை மருத்துவம் கண்டுபிடிக்க முடியாத 'நோய்நாடி, நோய் முதல் நாடி–அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச்செயல்' சித்த மருத்துவனின் திறமாம். நாடி பார்க்கும் திறமில்லாதான் மருந்தனேயன்றி மருத்துவனாகான். இந்திய மருத்துவம் சித்த மருத்துவமே. ஆயுர்வேதம் என்னும் ஆரிய மருத்துவம் சித்த மருத்துவத்தின் வடநாட்டு வகையே.'

பாவாணர் இவ்வாறு கூறுவதிலிருந்து சித்த மருத்துவம் எத்தகையது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

சித்தர்களின் நெறியிலே எளிதில் புரிந்து கொள்ள முடியாத கூறுகள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றை பலராமய்யா அவர்கள் 'சித்தர் மெய்ப்பொருள்' என்னும் தமது நூலில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். சித்தர் நெறியா, அது யாருக்குப் புரியும் என்று கருதியிருந்த நமக்கு, இதனைப் படித்த பின்னர் அந்த நெறியில் ஆர்வம் உண்டாகிறது. இது பலராமய்யா அவர்களின் நூல்களால் நமக்குக் கிடைத்த ஒரு நல்ல பயனாகும்.

இறுதியாக ஒன்று சொல்லுகிறேன். பலராமய்யா வின் நூல்களில் கூறப்பட்டுள்ள செயல் முறைகளைக் கைக்கொள்வது இயலாது என்று ஒரு சாரார் கருத லாம். அப்படியே வைத்துக்கொண்டாலும் அந்நூல் களைப் படிப்பதால் சித்த மருத்துவம் பற்றிய ஒரு தெளிவாவது நமது உள்ளத்தில் பிறக்கும். அந்தத் தெளிந்த அறிவு நம்மிடத்தே நிலைத்து நிற்கும். நாளடைவில் நம்மையறியாமலே அதனால் நாம் நலம் பெறுவோம் என்பது திண்ணம். இந்த ஒன்றே நமக் குப் போதும்.

பலராமய்யா அவர்களின் நூல்களைப் பற்றி நான் இவ்வளவு விரிவாக எழுதியதற்கு ஒரு காரணம் உண்டு.

உலகத்திலேயே தலைசிறந்த மருத்துவம் ஏதே னும் உண்டெனின், அது சித்த மருத்துவமேயாகும் என்று மேதை பலராமய்யா கூறுகிறார்கள்.

ஒருவர் இவ்வாறு கூறுவதற்கு எத்துணை வலு வான நம்பிக்கை வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சித்த மருத்துவத்தில் அவர்களுக்கு உள்ள திண்ணிய நம்பிக்கை நமக்கும் வரவேண்டும் என்பது கருதிதான் இத்துணை விரிவாக எழுதியிருக்கிறேன்.

வாழ்க சித்த மருத்துவம்!

–மெ. சிதம்பரம்
("தமிழ் முரசு")

தமிழ் மருத்துவக் காவலர்

—:—

சித்த வைத்திய முறையை மலேசியாவில் பரப்புவதற்காகத் தாம் அடிக்கடி மலேசியாவுக்கு வந்து போக விரும்புவதாகத் தமிழகத்திலிருந்து இங்கு வந்திருக்கும் சென்னை நீதிபதியும் சித்த வைத்திய மேதையுமான திரு. பலராமய்யா தெரிவித்தார்.

மலேசிய வானொலியில் அவரது 16 பேச்சுகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. சிங்கப்பூர் வானொலியிலும் அவர் உரை நிகழ்த்தியுள்ளார்.

இங்குள்ள (கோலாலம்பூர்) தமிழ் சித்த வைத்தியக் கடைகளுக்குத் தாம் வருகை புரிந்ததாகவும் அக்கடையிலுள்ளவர்கள் சித்த வைத்தியத்தின் முறையைப் புரிந்துகொள்ளாது புத்தகங்களைப் பார்த்து மருந்து கொடுப்பதாகவும் திரு. பலராமய்யா கூறினர்.

சீனர்களது மருந்துக் கடைகளுக்குக் கூடத் தாம் விஜயம் செய்ததாகவும் ஆனல் அவற்றின் வைத்திய முறைகளை விளக்கிக்கூற அவர்களுக்குத் தெரியவில்லை என்றும் தமிழ் மருத்துவத்தின் காவலரான திரு. பலராமையா கூறினர்.

நெடு வாழ்வு வாழ்வதற்கான ஆராய்ச்சியில் சித்தர்கள் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றனர் என்றும் அப்படிப்பட்ட சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மூலிகை மருந்துகளைப் புத்தகங்களைப் பார்த்துக் கொடுத்தால் இந்தக் கலை முன்னேற வழி இல்லை என்றும் அவர் மேலும் கூறினர்.

விஞ்ஞானத்தை மிஞ்சியது -

சித்த வைத்தியமானது விஞ்ஞான முறையிலானது என்றும், ஏன் அதைவிடக் கூட மேம்பட்டது என்றும், உடலுக்கு எந்த முறையில் இந்த வைத்திய முறை ஏற்றது என்பதை விஞ்ஞான முறையில் நிரூபிக்க வேண்டும் என்றும், அப்போதுதான் மக்கள் இதன் பெருமையை உணர்வர் என்றும் அவர் சொன்னர். திரு. பலராமய்யா தொடர்ந்து கூறியதாவது:—

"நான் ஏற்கனவே இலங்கை, பர்மா ஆகிய நாடுகளுக்குப் போயிருக்கின்றேன். ஆனால் மலேசியாவுக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும் சித்த வைத்திய முறையை பரப்புவதற்காக இனிமேல் நான் அடிக்கடி மலேசியாவுக்கு வந்து போவேன்.

"இந்த வைத்திய ஆராய்ச்சிக்காக 50000 ரூபாய் செலவிட்டிருக்கின்றேன். இப்போது என்னிடம் அந்த ஆராய்ச்சி அறிவுதான் உள்ளது. மனிதவாழ்வு நிலையற்றது. அதனால் அந்த ஆராய்ச்சி அறிவையும் பிறருக்குக் கொடுத்துவிட விரும்புகின்றேன்.

புற்றுநோய் குணம் -

"இதுவரை இரண்டு மூன்று பேருக்கு புற்றுநோய் வியாதியைக் குணப்படுத்தி இருககின்றேன். இதற்காக தமிழகத்தில் உள்ள பல பத்திரிகைகளும் என்னைப் பாராட்டியுள்ளன. அதேபோன்று பலருக்கு மஞ்சக் காமாலை நோயையும் நான் குணப்படுத்தி இருக்கின்றேன். அப்படி குணமடைந்திருப்பவர்களில் தமிழக நிதியமைச்சர் திரு. மதியழகன், 'தமிழ் முரசு' பிரதிநிதி திரு. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் அடங்குவர்.

'நான் வைத்தியத்தைத் தொழிலாகக் கொள்ளவில்லை. வசதி இல்லாத ஏழைகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்து வருகின்றேன. வசதியுள்ள பணக்காரர்களுக்குக் குறிப்பிட்ட மருந்துகளை வாங்கிப் பயன்படுத்த சிட்டை எழுதிக்கொடுத்து வருகின்றேன்.

"இங்குள்ள மக்கள் சித்த வைத்திய முறையை விரும்புகிறார்கள். அவர்களுக்குச் சித்த வைத்திய முறைகளை விளக்க விரும்புகிறேன். ஆனால் அடுத்த முறை வரும்போதுதான் இதனைச் செய்யவேண்டும். இன்னும் ஓர் ஆண்டுக்குள் மீண்டும் மலேசியாவுக்கு வருவேன்.

"தற்போது முக்கியமான மருந்துகளின் மாதிரிகளை மட்டும் கொஞ்சம் கொஞ்சம் கையோடு கொண்டு வந்திருக்கின்றேன். நோய்கள் சம்பந்தமாக யார் வேண்டுமானாலும் வந்து எனது ஆலோசனைகளைப் பெற்றுச் செல்லலாம். ஆனால், நான் மருந்து வியாபாரம் செய்வதாக எண்ணி வியாபாரிகளோ, ஏஜெண்டுகளோ வர

வேண்டாம்; அவர்கள் கேட்டாலும் அவர்களுக்கு நல்ல மருந்துகளை சிபாரிசு செய்வேன் அவ்வளவே.

டாக்டர்கள் சிபாரிசு -

"எனது வைத்திய முறைகளைப்பார்த்த சென்னையிலுள்ள டாக்டர்கள் பலர், குணமாகாத நோய்களையுடைய பல நோயாளிகளை என்னிடம் அனுப்பி வைப்பர். அப்படி அவர்கள் அனுப்பிவைக்கும் நோயாளிகள் எனது மருந்தினால் குணமடைகின்றனர். சித்த வைத்தியம் ஓர் அற்புதமான வைத்திய முறையாகும்".

'வாத வைத்தியத்துக்காதி', 'உங்கள் வீட்டில் சித்தர் மருந்து', 'சித்தர் மெய்ப்பொருள்', 'நீடுழி வாழ வழி' என்னும் தலைப்புகளில் தமிழிலும், 'சித்தர் மருந்துகளின் பெருமை' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் திரு. பலராமய்யா புத்தகங்கள் எழுதியுள்ளார்.

சென்னையில் பிரபல நீதிபதியாகவும் இருக்கும் திரு. பலராமய்யா ஐ. நா. வுக்கான மலேசியாவின் முன்னாள் நிரந்தர பிரதிநிதியாக இருந்த பிரபல வழக்குரைஞர் திரு. ரமணியைச் சந்தித்து மலேசியாவிலுள்ள சட்டததுறை நுணுக்கங்கள் பற்றிப் பேச்சுகள் நடத்தினார்.

பினாங்கு விஜயம் -

திரு. பலராமய்யா ஏப்ரல் மாதம் 22-ந் தேதி (1969) செவ்வாய்க்கிழமை மாலை விமானம் மூலம் கோலாலம்பூரிலிருந்து பினாங்கு சென்றடைவார். ஞாயிற்றுக்கிழமை வரை பினாங்கில் பெருநிலக்கிழார் வள்ளல் நா. ரெங்கசாமி பிள்ளை வீட்டில் (24 மார்க்கெட் ஸ்திரீட்டில்) அவர் தங்கியிருப்பார். அப்போது விருப்பும் அன்பர்கள் மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அவரிடமிருந்து பெறலாம்.

திங்கட்கிழமை பினாங்கிலிருந்து விமானம் மூலம் சிங்கப்பூர் செல்லும் திரு பலராமய்யா, சிங்கப்பூரில் ஒரு வார காலம் தங்கியிருந்துவிட்டு தமிழகம் திருப்புவார்.

— தேவர்.

("தமிழ் முரசு")

தேசீய மலரும் தேனும்

——;:——

"சித்த வைத்தியம் மலேசியாவில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்று பினங்கு கூட்டத்தில் பேசுகையில் நீதிபதி பலராமய்யா பி.ஏ., பி.எல். கூறினர்.

"இங்கிருக்கும் சீன குளிர்பான வியாபாரிகள் வல்லாரை போன்ற மூலிகைகளை விற்பனை செய்கிறார்கள். தாமரை விதை போன்ற பொருட்களும் அவர்களுடைய மருந்துக் கடைகளில் கிடைக்கின்றன. இந்தியாவில் சித்தர்களால் அறிமுகம் செய்யப்பட்ட பச்சிலைகளை சீனர்கள் பெரிதும் உபயோகிப்பதைக் கண்டு வியப்படைகிறேன். வல்லாரை இலையை உட்கொண்ட காரணத்தால் சுமார் 230 ஆண்டுகள் ஒரு சீனர் ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்திருக்கிறார்.

"இஞ்சி சிறந்த பொருள். ஆயுளை நீடிக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. தினமும் இஞ்சிச் சாறு அருந்தி வந்த ஒரு திபேத்தியர் 150 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்.

"மலர்களிலும் மாமருந்து உள்ளது. உங்கள் நாட்டு தேசிய மலரும் எங்கள் நாட்டு தாமரையும் இருதய நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் பெற்றவை.

"தேன் இணையற்ற மருந்து; நல்லெண்ணெயின் பெயரே அதன் நலத்தைக் குறிப்பிடுகிறது. வீட்டில் கறி செய்வதற்கு இருக்கும் அத்தனை பொருட்களும் நோய்களைக் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தவை. உணவே மருந்து; மருந்தே உணவு.

"சித்தவைத்தியத்தைக் கையாள்வதன் மூலம் நீடூழி வாழ இயலும். மேல் நாட்டு மருந்து மோகத்தில் மூழ்கி இருப்பவர்கள் விழிப்படையவேண்டும். இயற்கையோடு இணைந்து வாழும் வழியை சித்தர்கள் கூறினர். உலகம் 'முழுவதற்கும் உரியது இந்த மருத்துவக்கலை.

வள்ளல் ரெஜு —

"வள்ளுவமணி வள்ளல் ரெஜு தங்களைக் கண்டு பேசும் வாய்ப்பை ஏற்படுத்திய பெருந்தகை! அவருடைய முயற்சியின் பேரில் உங்கள் நாட்டையும் உங்களையும் காணும் பேறு பெற்றேன். அவருக்கு நீங்களும் நானும் நன்றிக்குரியவர்கள்.

"இந்த நாட்டில் சித்தர் கலைக் கழகம் காண நீங்கள் ஆவன செய்யவேண்டும்.

"இங்கு இயற்கை மருத்துவத்தில் இருக்கும் ஆர்வத்தைக் கண்டு மகிழ்வோடு திரும்புகிறேன்" என்று திரு. பலராமய்யா கூறினர்.

நீதிபதி சச்சிதானந்தம் —

பினங்கு முதல் மாஜிஸ்திரேட் மாண்புமிகு சச்சிதானந்தம் இக்கூட்டத்தில், நீதிபதி பலராமய்யாவிற்கு மாலையணிவித்தார். இயற்கை வைத்தியத்தில் தமக்கு ஈடுபாடு உண்டு என்றும் பலராமய்யா மனிதகுலத்தின் மீது கொண்டுள்ள பற்றும் பரிவும் பாராட்டத்தக்கவை என்றும் அவர் கூறினர்.

பட்டர்வொர்த் ஜைனுத்தீன் —

பதினெண் சித்தர்களைப் பற்றியும் சித்த வைத்தியத்தின் சிறப்புகள் பற்றியும் கவிஞர் பட்டர்வொர்த் ஜைனுத்தீன பி.எஸ்ஸி. விரிவான உரையாற்றினர்.

சித்த ஆற்றலின் மூலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தேரையர் என்னும் சித்தர் அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்று ஜைனுத்தீன் குறிப்பிட்டார்.

ஒருவரின் தலைக்குள் இருந்த தேரையை அகற்றியதால், தேரையர் என்ற பெயரும் அச்சித்தருக்கு அளிக்கப்பட்டது என்றார் அவர்.

திருக்குர்ஆனில் 'தேன்' என்ற தலைப்பில் ஓர் அத்தியாயமே இருக்கிறது. தேனின் ஆற்றலை இறைவன் தெளிவுபடுத்துகிறான். இத்தேனை சித்தர்கள் பெரிதும் புகழ்ந்துள்ளனர் என்று ஜைனுத்தீன் குறிப்பிட்டார்.

நீதிபதி பலராமய்யாவின் நூல்களை தமிழ்மொழி பேசும் அனைவரும் பெறவேண்டும். இந்த நூல்கள் இல்லத்தில் இருப்பதால் பலராமய்யா உள்ளத்தில் இருப்பார் என்றார் ஜைனுத்தீன்.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய வள்ளல் ரெஜு, நீதிபதி பலராமய்யாவின் தொண்டுகளைப் பற்றி விளக்கிப் பேசினார். அவரோடு பழகும் பேறு பெற்றமைக்கு மகிழ்ச்சி தெரிவித்த வள்ளல், தமது அனுபவ வாழ்வில் சித்த மருத்துவம் அளித்துள்ள சிறப்பைப் போற்றினார்.

நீதிபதியின் வைத்திய நூல்களைப்பெறுவதால்வாழ்க்கையில் ஏற்படும் வைத்தியச் செலவைக் குறைக்க முடியுமென்று வள்ளல் உறுதி கூறினார்.

கூட்டத்தின் இறுதியில் சித்த வைத்தியமணி பலராமய்யா பலருடைய கேள்விகளுக்கு பதிலளித்தார்

"தமிழ் முரசு" 30-4-69

புற்று நோயும் சித்த வைத்தியமும்

ஒருவனுடைய இரத்தத்தில் விஷம் கலப்பதாலேயே அது கட்டியாக உருவாகி புற்று நோயாக மாறுகிறது. அத்தகைய புற்றுநோயை நிச்சயமாகச் சித்த வைத்தியத்திஞல் குணமாக்க முடியும் என்று சென்னை நீதிபதியும் சித்தவைத்திய மணியுமான திரு. பலராமய்யா கூறிஞர்.

கடந்த ஏப்ரல் மாதம் 18–ந் தேதி ஒருமாதகாலச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, மலேசியா, சிங்கப்பூருக்கு வருகை தந்த சித்தவைத்தியமணி திரு. பலராமய்யா இப்போது சிங்கப்பூரில் தங்கியுள்ளார். சனிக்கிழமையன்று இவர் தமிழகம் திரும்புகிருர்.

இன்றிரவு (8–5–69) 8 மணிக்குக் கோமள விலாஸ் உணவகத்தில் திரு. பலராமய்யா அவர்களுக்கு ஒரு விருந்தளிக்கப்படுகிறது.

ஒரு பேட்டியின்போது மேற்கண்ட கருத்தை வலியுறுத்திக் கூறிய திரு. பலராமய்யா, சித்தவைத்தியம் நலிந்துவருவது கண்டு வருத்தம் தெரிவித்தார்.

"புற்று நோயைச் சித்தவைத்தியத்திஞல் குணப்படுத்தமுடியும் என்று கூறும் தாங்கள் ஏன் அந்த ஆராய்ச்சியை விரிவுபடுத்தி குணப்படுத்திக் காட்டக் கூடாது?" என்று கேட்டபோது, தாம் அதைத் தொழிலாகக் கொள்ளாததால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்று அவர் பதிலளித்தார்.

'திருக்கோயில்', 'ஞானசம்பந்தம்' என்ற இதழ்களில் 'உடல் வளர்க்கும் மூலிகைகள்' என்ற தலைப்பில் தொடர்கட்டுரைகள் எழுதியுள்ளதாகக் கூறிய திரு. பலராமய்யா, அந்தக் காலத்திலேயே சித்தவைத்தியர்கள் 4448 நோய்களை அறிந்திருப்பதாகவும் அதைக் குணப்படுத்தும் வழிமுறைகளைத் தெரிந்ததாகவும் குறிப்பிட்டார்.

4448 நோய்களுக்குச் சித்தவைத்திய மருந்துகள் —

இதுவரை தாம் ஆறு புத்தகங்கள் வெளியிட்டிருப்பதாகவும், அதில் நான்கு சித்தவைத்தியம் பற்றித் தாய்மார்கள் கூட புரிந்துகொள்ளும் வகையில் ஆக்கப் பட்டுள்ளது என்றும் கூறிய சித்த வைத்தியமணி, அப்புத்தகத்தின உதவியினுல் மூலிகைகளைக் கொண்டு தாய்மார்கள் சிகிச்சை செய்வதாகவும் சொன்னூர்.

சித்த வைத்தியமானது விஞ்ஞான முறைச் சிகிச்சையானதன்று என்று கூறிவந்த இப்போதைய விஞ்ஞான முறையிலான டாக்டர்கள் கூட அண்மைய காலங்களில் சித்த வைத்திய மருந்து முறை பற்றி ஆராய்ச்சி செய்ய முன்வந்திருப்பது கண்டு அவர் மகிழ்ந்துரைத்தார்.

புற்றுநோய்க்கும் மூக்குப்பொடிக்கும் சம்பந்தமில்லை —

ஒரு கேள்விக்குப் பதிலளித்த திரு. பலராமய்யா, விஞ்ஞான டாக்டர்களால் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட பல 'கேஸ்களை' தாம் கவனித்து சித்த வைத்தியத்தின் மூலம் நலம் பெறச் செய்துள்ளதாகவும் கூறினூர்.

மற்ருெரு கேள்விக்கு திரு. பலராமய்யா பதிலளிக்கையில், புற்றுநோய் கண்டிருந்த முன்னுல் தமிழக முதல்வர் அண்ணுவை குணப்படுத்தும் நோக்கத்துடன் பல முறை வைத்தியமனையிலும் வீட்டிலும் சென்று கண்டதாகவும், எங்கு என்னுல் குணப்படுத்தமுடியாமல் போய் விடுமோ என்று அவர் அஞ்சியதாகவும் கூறிய திரு. பலராய்மயா, தங்களிருவரின் கல்லூரிகால பழக்க வழக்கங்களையும் நட்பு முறையையும் நினைவு கூர்ந்தார்.

"புற்றுநோய்க்கும் மூக்குப்பொடிக்கும் ஏதேனும் உறவுண்டா?" என்ற கேள்விக்கு "சம்பந்தமில்லை" என்ருர்.

விஞ்ஞானமுறை வைத்தியத்தைத் தவிர்த்து வேறு பல வைத்திய முறைகளைப் பற்றி அவர் ஒப்பிட்டுக் கூறியபோது "தொண்டைக்குள் செல்லமுடியாத ஒரு கிளாஸ் கசாயத்தைக் குடிக்கவேண்டிய அவசியமுடை யன மற்ற வகை வைத்திய முறைகள். ஆனால் சித்த வைத்தியமானது கடுகளவு மருந்து கொண்டு குண மாக்கக் கூடியது" என்றார்.

உச்சநிலையில் காய்ச்சலுக்கு ஆட்பட்டிருக்கும் ஒரு வனை நான்கு மணி நேரத்திற்குள் குணப்படுத்திவிடும் சக்தி சித்தவைத்தியத்திற்கு உண்டு என்பதை தாம் இங்கு குறிப்பிட விருப்புவதாகவும் அவர் சொன்னார்.

தமிழ் நாட்டிலுள்ள 16 சித்தவைத்திய மனைகளுக்கு ஆலோசகராகவும உள்ள திரு. பலராமய்யா தம்மை நாடிவரும் பலருக்கு இலவசமாகவே சிகிச்சை அளித் துள்ளார்.

நீதித் துறையும் சித்தவைத்தியமும் —

"கற்றறிந்து நீதிபதியாக உள்ள நீங்கள் எவ்வாறு சித்த வைத்தியத்தில் ஆர்வம்" காட்டினீர்கள் என்று வினவியதற்கு 10 வயது பாலகனாய் இருந்தபோது, தாயார் மூலிகைகள் கொண்டு சிகிச்சையளித்ததிலி ருந்து அதில் ஆர்வம் பிறந்ததாகக் கூறினார். ஆர்வத் திற்கு தாயார்தான் முன்னோடி என்றும் அவர் சொன்னார்.

சிறந்த வைத்தியமான சித்த வைத்தியம் நலிந்து விடாமல் போகாதிருக்க சித்தர் கலைக்கழகம் ஒன்றை நிறுவி வழி நடத்துவதில் தமக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்பதை அவர் குறிப்பிட்டார்.

இவர் கோலாலம்பூரில் தங்கியிருந்த காலத்தில் ரேடியோ மலேசியாவுக்கு சித்த வைத்தியம் பற்றி 16 தொடர் பேச்சுக்களை அளித்துள்ளதாயும், சிங்கப்பூர் ரேடியோவிலும் இவரது 4 பேச்சுகள் ஒலிபரப்பாகும் என்றும் தெரிகிறது.

பேட்டி: ராஜா.

("தமிழ் மலர்")

SIDDAH MEDICINE

A prominent Indian Justice, Mr. V.Balaramiah, B.A.B.L. has arrived in Penang to make a cultural tour of Malaysia and Singapore.

Mr. Balarmiah was the former Chief Presidency Magistrate of Madras, and is on the present State Transport Appellate Tribunal.

He is known throughout the Tamil speaking world for his contribution to Siddah Medicine. He is a member of several Siddah Medicine organisations. He also serves in an advisory capacity to the Government of Madras for Native Medicine.

The Indian Justice has published several books in English and Tamil on this subject. His article on Siddah Medicine, submitted at the Second Tamil World Conference in Madras, was lauded by scholars throughout the world.

According to him, Siddah Medicine has the vital capacity of increasing man's life span. It is his intention to spread this message to all mankind. He believes in Universal Religion and Cosmic Life. His philosophy is to foster one world idea towards which the Siddahs strave during their lifetime.

GREEN GRASS FOR LONG LIFE

An Indian Magistrate from Madras came to Penang and found gold.

According to him, elements of the precious metal are in the herb known to Penang Hokkiens as "che' eh ch'-ow" (green grass).

In India, he added, the herb, called "v a l l a r a i" in Tamil, is known only to the "Siddhas" — those who possess the ancient knowledge of the Indian medicine.

The leaf-juice from the plant, according to a report made 100 years ago about the case of a 236-year-old man in China, is an "elixir of life", said Mr. Balaramiah.

The Chinaman reportedly told Western doctors that his longevity was attributable solely to the brew from the herb.

The brew also helps jaundice patients towards speedy recovery Mr. Balaramiah said.

CURE FOR CANCER

The Magistrate had applied for leave from his judicial duties to make a cultural tour of Malaysia and Singapore. He said he was in Penang to introduce the Indian system of medicine, particularly that of the Siddhas.

The system, he said, was the most effective and cheapest.

The Siddhas believed, for example, that cancer was due to poison in the blood. Therefore, an operation was not the remedy. To cure cancer, the blood has to be purified said Mr. Balaramiah.

The Magistrate himself had cured three cases of breast cancer using ointment from a specially prepared mixture of a herb, called in Tamil, "Manjal Karisalai", mercury and sulphur oxidysed together and prepared in honey for 40 days.

With the application of common salt, fomentation took place and the cancer dissolved and disappeared.

FLOWERS FOR HEART DISEASES

"The hidiscus, the national flower of Malaysia, is a 'heart tonic'; the lotus purifies the heart," said visiting Magistrate, Mr. V. Balaramiah, at a talk at the Khek Association Hall in Burmah Road yesterday.

Many cardiac diseases could be treated with these common flowers he added.

He noted that the vital "herbs of life" were used daily in Malaysia.

He also stressed on the importance of honey. There was no disease, he said, which honey could not cure.

Earlier, Mr Balaramiah said in introduction that Siddha medicine was more popular in Malaysia than India—the country of its origin.

He called for the formation of a Siddha-Cultural body.

At the end of the function, which was presided over by Mr. N. Rengasamy Pillai, the Magistrate was garlanded by Penang's First Magistrate, Mr. W. Satchithananthan.

Mr. Butterworth Zainuddeen was another speaker.